வைத்து இருக்கிறார்கள். இங்கே அதுபற்றி 1963-64-ம் ஆண்டில் ஆராயப்பட்டு அது கைவிடப்பட்டுவிட்டது. ப்ரைவேட் ப்ராக்டிஸ் செய்யக்கூடாது என்று சொல்லி, ஒரு குறிப்பிட்ட அளவுக்கு ஊதியம் தந்துவிடுவதன் மூலமாக மிகச் சிறந்தவர்களுடைய பணிகளைப் பொது மருத்துவ மனை பெறமுடியாமல் போய்விடும் என்ற கருத்தும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் அரசாங்க மருத்துவ மனையை விட்டுவிட்டுத் தனியாகவே ப்ராக்டிஸ் செய்ய ஆரம்பித்து விடுவார்கள். குறிப்பிட்ட ஏதாவது ஊதிய உயர்வு பெறக்கூடியவர்கள்மட்டுந்தான் இத்தகைய மருத்துவ மனையில் இருப்பார்கள் என்ற கருத்தும் தெரிவிக்கப்பட்டு வருகிறது. ஆகவே, முழுவதுமே எல்லா மருத்துவ வல்லுநர்களுக்கும் ப்ரைவேட் ப்ராக்டிஸை அனுமதிக்காமல், ஓரளவு ஊதியத்தை உயர்த்திக் கொடுப்பது என்று 1963-64-ம் ஆண்டு சிந்திக்கப்பட்டு, கல்வி பயிற்றுவிக்கும் நிலையங்களில்மட்டும் 13½ இலட்ச ரூபாய் அதிகம் ஆகும் என்றும், எல்லா வகைகளுக்கும் செய்யவேண்டும் என்றால் 20 லட்சம் ரூபாய் அதிகம் ஆகும் என்றும் கணக்கிடப்பட்டது. இப்பொழுது ஆந்திர மாநிலத்தில் நடைமுறைக்குக் கொண்டுவரப் பட்டிருக்கிறபடியால், அதனுடைய குறிப்புகளை அரசு வரவழைத்து, இப்பொழுது மருத்துவத் துறை இயக்குநர் ஆராய்ந்து கொண்டிருக்கிறார். அவருடைய அறிக்கை வந்தபிறகு மேலும் இந்த அரசு அதுபற்றி ஆராயும்.

திருச்சியில் தமிழ்ப் புலவர் கல்லூரி

*194 வினா.—**திரு. வை. சுவாமிநாதன் :** மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

திருச்சியில் ஒரு தமிழ்ப் புலவர் (வித்வான்) கல்லூரி ஆரம்பிக்கும் உத்தேசம் ஏதேனும் உண்டா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. வை. சுவாமிநாதன் : திருச்சி மாவட்டத்திலிருந்து இந்த ஆண்டு ஏராளமான மாணவர்கள் திருவையாற்றில் உள்ளது போன்ற வித்துவான் பள்ளிகளுக்கு அப்ளிகேஷன் கொடுத்தும் இடம் கிடைக்காத நிலைமை இருக்கிறது. தமிழ் வளர்ச்சி அடைந்து வரும் இந்த நாளில் திருச்சி போன்ற மத்திய இடங்களில் வித்துவான் கல்லூரியை ஆரம்பித்தால் மாணவர்களுக்கு அனுகூலமாக இருக்கும். ஆகவே, இதுபற்றி அரசு மீண்டும் பரிசிலனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இப்போது தமிழாசிரியர்களைப் பயிற்றுவிக்க 14 தமிழ்க் கல்லூரிகள் இருக்கின்றன. இந்த 14 தமிழ்க் கல்லூரிகளும் தனியாரால் நடத்தப்பட்டு வருகின்றன. அரசாங்கத்தின் சார்பாக எந்தத் தமிழ்க் கல்லூரியும் நடத்தப்படவில்லை. எங்காவது தனியார் தமிழ்க் கல்லூரியை

[1969 செப்டம்பர் 11]

அமைக்க வேண்டுமென்று விரும்பினுலும்கூடப் பல்கலைக் கழகத்தின் அனுமதிபெற்று உதவிக்காக அரசாங்கத்தை அணுகினல் முறைப்படி கவனிக்கப்படும். இப்போது உள்ள 14 தமிழ்க் கல்லூரிகளில் பயிற்றுவிக்கப்படும் ஆசிரியர்களே தமிழகத்தின் தேவைக்குப் போதுமானது. மேலும் தமிழ்க் கல்லூரிகளை இப்போது ஆரம்பித்தால் இப்போது இருக்கக்கூடிய சூழ்நிலையில் வேலையில்லாத் திண்டாட்டந்தான் எற்படும்.

துவக்கப் பள்ளிகள்

* 195 வினு.—திரு. பெ. மலைச்சாமி : மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவிற்கு விடையளிப்பாரா—

துவக்கப்பள்ளிகளுக்குரிய பாடப் புத்தகக் குழுவில் துவக்கப் பள்ளி ஆசிரியர்களும் இடம் பெறச் செய்யும் உத்தேசம் எதேனும் பரிசிலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தொடக்கநிலைப் பள்ளிகளுக்கென்றே தனிப்பட்ட பாடப்புத்தகக் குழு எதுவும் இல்லை. தொடக்க நிலைப்பள்ளிகளையும் சேர்த்து ஏற்பளிக்கப் பட்ட பள்ளிகள் அனைத்தின் தேவையையும் இப்பொழுது இருக்கும் பாடப்புத்தகக் குழு நிறைவு செய்கிறது. தொடக்க நிலைப் பள்ளிகளுக்கென்றே தனிப்பட்ட பாடப்புத்தகக் குழு இல்லாததால், இவ் வினு எழுவில்லை.

* 196 வினு.—திரு. ஆர். கருப்பையா : மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) ஆரம்பப் பள்ளிகளுக்குப் பாடத்திட்டம் வகுப்பது யார்?

(இ) தற்போதுள்ள பாடத் திட்டம் ஆரம்பப்பள்ளி மாணவர்களின் அறிவுக்கு அப்பாற்பட்டு உள்ளதால் அதனைத் திருத்தி அமைக்கும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) அவ்வப் பொழுது அமைக்கப்படும் தகுதியான குழுக்களால் வகுக்கப்பட்டு சர்க்கார் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படுகிறது.

(இ) மாறுதலைக் கோரி எவ்வித முறையீடுகளும் கிடைக்கப் பெறவில்லை. அதனுல் இக்கேள்விக்கு இடமில்லை.

* 197 வினு.—திரு. வை. சுவாமிநாதன் : மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) ஆரம்பக்கட்ட பள்ளிகளில் பாடத்திட்ட முறைகளை மாற்றம் செய்வதால் மாணவர்கள் பாதிக்கப்படுகிறர்கள் என்பதை அரசு அறியுமா ?

(இ) ஆம் எனில், இதைத் தவிர்க்க அரசு என்ன நடவடிக்கை எடுக்க உத்தேசித்துள்ளது ?